# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

### <u>இந்திய துணை ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ( 2026 ஏப்ரல் 19-20)</u>

இந்தியத் துணை ஜனாதிபதி மாண்புமிகு திரு சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் 2026 ஏப்ரல் 19ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவரது இந்த விஜயத்தின் போது மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சு ஆகியவற்றின் இணை அமைச்சர், கௌரவ பேராசிரியர் எஸ் பி சிங் பாகேல், பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ டாக்டர் கே லக்ஷ்மன் மற்றும் டாக்டர் மேதா விஷ்ரம் குல்கர்னி ஆகியோரும் இணைந்திருந்தனர். இந்திய துணை ஜனாதிபதி ஒருவரால் இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் முதலாவது இருதரப்பு விஜயம் இதுவாகும். முன்னதாக 2000 ஆம் ஆண்டு அக்டோபரில் அப்போதைய இந்திய துணை ஜனாதிபதி திரு கிரிசான் காந் அவர்கள் இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கே அவர்களின் அரச இறுதிமரியாதை நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

2. மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களை ஏப்ரல் 19ஆம் திகதி கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்திருந்தார். இரு தலைவர்களும் இலங்கையில் இந்தியாவால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்கள் உட்பட தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இருதரப்பு முயற்சிகள் தொடர்பாக மீளாய்வு செய்திருந்தனர். 2025 நவம்பர் மற்றும் டிசம்பரில் டித்வா புயல் காரணமாக சேதத்தினை சந்தித்திருந்த வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில் அம்மார்க்கத்தின் ஊடான ரயில் சேவைகள் மீள ஆரம்பித்திருப்பதனை அவர்கள் இருவரும் அறிவித்திருந்தனர். இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையின் கீழ் இந்த புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பேரழிவுகள் பல்வேறு இடங்களிலும் வீதி இணைப்புகளை துண்டித்திருந்த நிலையில் அவற்றை மீள இணைக்கும் முகமாக மூன்று பெய்லி பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டமையையிட்டு மாண்புமிகு துணை ஜனாதிபதி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோர் தமது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி இருந்தனர். இந்த பாலங்கள் இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் பூரணமடைந்த அதேவேளை டித்வா புயலின் பின்னரான காலப் பகுதியில் முன்னெடுக்கப்படும் புனர்நிர்மாண மற்றும் புனர்வாழ்வு பணிகளுக்காக இந்தியாவால் வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவிப் பொதியின் அங்கமாக இந்த பாலங்கள் இந்திய ராணுவத்தினரால் அமைக்கப்பட்டன. அத்துடன் இந்தியா தலைமையிலான இன்டர்நஷனல் பிக் கேட் அலையன்ஸ் அமைப்பில் இணைவதற்கு இலங்கை தீர்மானித்துள்ளமை குறித்தும் துணை ஜனாதிபதி அவர்கள் தனது மகிழ்ச்சியை தெரிவித்திருந்தார்.

3. மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்களை வரவேற்று மேன்மைதங்கிய இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் மதிய உணவுடனான உபசார நிகழ்வு ஒன்றையும் நடத்தி இருந்தார். இந்நிகழ்வின்போது இரு தலைவர்களும் இந்தியா இலங்கை இடையிலான ஆழமான நாகரீகப் பிணைப்புகள் மற்றும் இப்பிணைப்புக்கு வலுவூட்டும்

துடிப்பான மக்களிடையிலான உறவுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியிருந்தனர். கல்வி அமைச்சரான இலங்கை பிரதமர் அவர்களும், துணை ஜனாதிபதி அவர்களும் இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி நிதிய புலமைப் பரிசில் திட்டம் மேம்படுத்தப்படுகின்றமைக்கான ஆதரவு தொடர்பாக நமது திருப்தியை இச்சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தி இருந்தனர். இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை 350 இலிருந்து 700 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கும் அதேவேளை மாதாந்த கொடுப்பனவு உயர்தர மாணவர்களுக்காக 2500 இலங்கை ரூபா ஆகவும் உயர்கல்வியை பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்காக 7500 ஆகவும் அதிகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் இது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு நன்மை அளிக்கும் ஒன்றாக காணப்படுகின்றது.

4. கொழும்பில் ஏப்ரல் 19ஆம் திகதி இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு சஜித் பிரேமதாசா அவர்களை சந்தித்த மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தின் தலைவர்கள் மற்றும் இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார்

5. அது மட்டுமல்லாமல் கொழும்பிலுள்ள புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்ற ஒரு சமூக வரவேற்பு நிகழ்வில் கிட்டத்தட்ட 1,000 இந்திய புலம்பெயர் மக்கள் மத்தியில் மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் உரை நிகழ்த்தியிருந்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்களால் வெளிநாடு வாழ் இந்திய பிரஜைகளுக்கான அட்டையை பெற்றுக் கொள்வதற்கான தகுதியானது, இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டு இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் ஐந்தாம் மற்றும் ஆறாம் தலைமுறை வரைக்கும் விஸ்திரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த எல்லையானது நான்காம் தலைமுறை மட்டுமே காணப்படுகின்றது. அத்துடன் தமது பூர்வீகத்தினை நிரூபிப்பதற்கான சான்றுகளாக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை சமர்ப்பித்தும் குறித்த வெளிநாடு வாழ் இந்திய பிரஜைகளுக்கான அட்டையினை பெற்றுக்கொள்ள முடியுமென மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் அறிவித்திருந்தார். அந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ்கள் இந்திய இலங்கை கடவுச்சீட்டுகள், கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் கண்டியில் உள்ள துணை உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றில் உள்ள பதிவுகள் உள்ளிட்ட ஆவணங்களை சமர்ப்பித்து வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான அட்டையினை தற்போது பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையில் வாழும் புலம்பெயர் இந்தியர்களால் நீண்ட காலமாக விடுக்கப்பட்டுவரும் கோரிக்கையாக இது காணப்பட்டிருந்ததுடன் இதன் மூலமாக குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் உட்பட இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்கள் நன்மையடைகின்றனர்.. அதுமட்டுமல்லாமல் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்காக இந்திய வீடமைப்பு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நான்காயிரம் வீடுகளில் இறுதித் தொகுதி 145 வீடுகள் காணொளி வழியாக மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்களால் கையளிக்கப்பட்டிருந்தது. 1835 கோடி இந்திய ரூபா (62.75 பில்லியன் இலங்கை ரூபா அண்ணளவாக) குறித்த இந்திய வீடமைப்பு திட்டமானது இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு முன்னோடியான நன்கொடை உதவி திட்டமாக காணப்படுகின்ற அதேவேளை இந்திய அரசாங்கத்தால் வெளிநாடு ஒன்றில் முன்னெடுக்கப்படுகின்ற பாரிய திட்டமாகவும் காணப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் அங்கமாக 50000 வீடுகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றொரு பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டமானது தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

6. அத்துடன் மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் கொழும்பில் உள்ள கதிரேசன் ஆலயம் மற்றும் 2026 பெப்ரவரியில், புனித புத்த பெருமானின் குஜராத் தேவ்னிமோரி புனித சின்னங்கள் தரிசனத்திற்காக வைக்கப்பட்ட கங்காராமை விகாரை ஆகியவற்றிலும் வழிபாட்டினை மேற்கொண்டிருந்தார்.

7. ஏப்ரல் 20 ஆம் திகதி இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ராகலை லிடேஸ்டேல் தோட்ட பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் விஜயம் செய்திருந்தார். பயனாளி குடும்பங்களுடன் அவர் சந்திப்பினை மேற்கொண்டிருந்ததுடன் அக்கிராமத்தில் 166 வீடுகள் மூன்றாம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டன.

8. நுவரெலியாவில் துணை ஜனாதிபதி அவர்கள் சீதை அம்மன் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார். இராமாயணத்துடன் தொடர்புடைய இம்முக்கிய இடத்தில்தான் இராவணனால் சிறைபிடிக்கப்பட்ட சீதை அசோகவனத்தில் தங்க வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

9. வெளிநாடு வாழ் இந்திய பிரஜைகளுக்கான அட்டை குறித்த அறிவிப்பு, இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் நிறைவு செய்யப்பட்டமை, புனரமைக்கப்பட்ட ரயில்வே மார்க்கத்தில் ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டமை, 3 பெய்லி பாலங்களை நிர்மாணித்தமை மற்றும் இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்தின் புலமைப் பரிசில் அறிவிப்பு ஆகியவற்றுக்கு மேலாக இந்தியா தலைமையிலான இன்டர்நஷனல் பிக் கேட் அலையன்ஸ் அமைப்பில் இணைவதற்கு இலங்கை தீர்மானித்தமை ஆகியவற்றுடன் இவ்விஜயத்தின் போது பின்வரும் உடன்படிக்கைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

i கிழக்கு மாகாணத்துக்கான பல்துறை நன்கொடை உதவித்திட்டத்தின் முதல் ஆறு முன்னுரிமைக்குரிய விடயங்கள் குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை

ii.முல்லைத்தீவில் உள்ள மாவட்ட வைத்தியசாலையில் நான்கு மாடி மருத்துவ விடுதி தொகுதி ஒன்றினை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை.

10.இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் மஹாசாகர் தொலைநோக்கு ஆகியவற்றில் இலங்கை முக்கிய பங்காளியாக உள்ளது. இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் அண்மைக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட ஈடுபாடுகளை தொடர்ந்து இந்திய துணை ஜனாதிபதி ஒருவரால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த இருதரப்பு விஜயமானது இந்தியாவையும் இலங்கையும் பிணைக்கும் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த மக்களிடையிலான உறவுகளை மேலும் வலுவூட்டுகின்றது.

***

**கொழும்பு**
**21 ஏப்ரல் 2026**
மூலம்: https://www.mea.gov.in/press-releases.htm?dtl/41063